**TAMIL NADU ELECTRICITY REGULATORY COMMISSION**
No. 17, Third Main Road, Seethammal Colony, Alwarpet, Chennai - 600 018.
Phone : ++91-044-2435 9156 / 2435 9215 / 2432 2037 Fax : ++91-044-2435 4982
email : tnerc@vsnl.net
Website : www.tnerc.org

**நாள்: 20.03.2007**

## பத்திரிக்கை வெளியீடு

**தமிழ்நாடு மின்சாரப் பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுக்கான (Standards of performance) ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிட்டுள்ளபடி பல்வேறு மின்சார பணிகளுக்காக நிர்ணயிக்கப்பட்ட செந்தரங்களை (Standards) தமிழ்நாடு மின்சார வாரியம் செயல்படுத்தத் தவறும்போது நுகர்வோருக்கு செலுத்த வேண்டிய ஈட்டுத் தொகை பற்றிய ஆணையத்தின் அறிவிக்கை.**

---

1. 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் சட்டப்பிரிவு 57ல் கூறியுள்ளபடி, உரிமதாரர்களின் பணியின் தரம், தொடர்ச்சி மற்றும் நம்பகத்தன்மை பற்றி ஆணையம் குறிப்பிடவேண்டும் அல்லது செயல்திறச் செந்தரங்களை செயல்படுத்த வேண்டும். மேற்குறிப்பிட்ட சட்டவிதிகளுக்கொப்ப 01.09.2004லிருந்து அமுலுக்கு வந்த தமிழ்நாடு மின்சாரப் பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகள் 2004ஐ தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வெளியிட்டது. அந்த விதிமுறை தொகுப்பில் விதிகள் 21 மற்றும் 22 (தமிழ்நாடு மின்சார வாரியம் கொடுக்கப்படவேண்டிய ஈட்டுத்தொகை) தவிர பிறவிதிகள் நடைமுறைக்கு வந்தன. தமிழ்நாடு மின்சார வாரியமானது புதிய சூழ்நிலைக்கு தனது பணியாளர்களை தயார் படுத்தி, செயல்திறச் செந்தரங்களை செயல்படுத்துவதில், பணியாளர் மற்றும் கருவிகள் தேவையினைப்பூர்த்தி செய்துகொள்ள மின்சார வாரியத்திற்கு கால அவகாசத் தேவையைக் கருத்தில் கொண்டு ஒழுங்குமுறை விதிகள் 21 மற்றும் 22ல் உள்ள விதிகள் நடைமுறைக்கு வருவதானது 30.11.2006 வரை விலக்கு அளிக்கபட்டிருந்தது.

2. அதைத்தொடர்ந்து, தற்போது, ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட செந்தரங்களை தமிழ்நாடு மின்சார வாரியம் செயல்படுத்தத் தவறும்போது நுகர்வோர்களுக்குச் செலுத்த

வேண்டிய ஈட்டுத்தொகை பற்றிய விதிகள் 01.01.2007 முதல் நடைமுறைக்கு வந்துள்ளன. மின்பகிர்வு உரிமதாரரால் (தமிழ்நாடு மின்சார வாரியம்) கொடுக்கப்பட வேண்டிய ஈட்டுத்தொகை பற்றிய விவரங்கள் ஒவ்வொரு மின்சாரப் பணிகளுக்கு எதிரே கொடுக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | பணி விவரங்கள் | செலுத்த வேண்டிய ஈட்டுத்தொகை |
|---|---|---|
| 1 | கேட்கும்போது மின் இணைப்பு கொடுக்கப்படவேண்டியவை<br>(அ) புது மின்னிணைப்பு<br>(ஆ) கூடுதல் மின்சுமை<br>(இ) தற்காலிக மின்னிணைப்பு<br>(ஈ) மின்னிணைப்பு இடமாற்றம்<br>(உ) மின்னிணைப்பு உரிமை மாற்றம்<br>(ஊ) மின் கட்டணவீத மாற்றம் | ஒரு நாள் தாமதத்திற்கு ரூ. 100/- வீதம் அதிகப்பட்சமாக ரூ. 1000/- க்கு மிகாமல் |
| 2 | பட்டியலிடல் (Billing) பற்றிய முறையீடுகள் | உரிய காலத்திற்குள் பதில் தராமைக்கு ரூ. 150/- |
| 3 | மின்னளவி (Meter) மாற்றிவைத்தல் | ஒரு நாள் தாமதத்திற்கு ரூ.100/- வீதம் அதிகபட்சமாக ரூ. 1000/-க்கு மிகாமல் |
| 4 | நுகர்வோர் முறையீடுகளுக்குப் பதில் நடவடிக்கை எடுத்தல் | ஒவ்வொரு நாள் தாமதத்திற்கும் ரூ. 25/- வீதம் அதிகபட்சமாக ரூ.250/-க்கு மிகாமல் |
| 5 | நுகர்வோர் சந்திப்பு ஏற்பாடுகளை ஏற்பதும், கடைபிடித்தலும் | சந்திப்பு ஏற்பாட்டைத் தவறவிட்டால் ரூ.50/- |
| 6 | குறை தீர்ப்பதைக் கையாளுதல் | குறை தீர்ப்பதைக் கையாளத் தவறிவிட்டால் ரூ. 50/ |

இருந்தாலும், 1(அ), 1(ஆ) மற்றும் 1(இ)ல் குறிப்பிடப்பட்டுள்ளவற்றைப் பொருத்தவரை, ஈட்டுத்தொகை செலுத்துவது கீழ்குறிப்பிட்டவற்றிற்கு மட்டும் பொருந்தும்.

(i) தாழ்வழுத்த மின் இணைப்பு பணிகளில் விரிவாக்கம் அல்லது மேம்பாடு தேவையில்லாதது.

(ii) உயர் அழுத்த / அதிக உயர் அழுத்த மின் இணைப்பு பணிகளில் விரிவாக்கம் அல்லது மேம்பாடு தேவையானது.

கீழ்க்குறிப்பிட்ட பணி வகைகளைப் பொருத்தவரை, ஈட்டுத்தொகை செலுத்துவதற்கான விதிமுறைகள் 1.07.2007 முதல் நடைமுறைக்கு வரும்..

| வ. எண் | பணி விவரங்கள் | செலுத்த வேண்டிய ஈட்டுத்தொகை |
|---|---|---|
| 1 | மின்வழங்கல் தடங்கல் | மின் வழங்கலை சீராக்க எடுபடும் ஒவ்வொரு 6 மணி நேரதாமதத்திற்கும் (அல்லது அதன்பகுதி தாமதவிகிதப்படி) ரூ. 50/- வீதம் அதிகபட்சமாக ரூ. 2000/- க்கு மிகாமல் |
| 2 | மின்னழுத்த ஏற்ற இறக்கம் மற்றும் அதன் முறையீடுகள். | குறிப்பிட்ட காலத்திற்குள் வருகைதர அல்லது முடிவுகளைத் தெரிவிக்க தவறினால் ரூ. 250/- |
| 3 | புது மின்னிணைப்பு, கூடுதல் மின்சுமை மற்றும் தற்காலிக மின்னிணைப்பு ஆகியவற்றிற்கு கேட்கும் போது மின்இணைப்பு கொடுக்கப்பட வேண்டியவை<br>(i) தாழ்வழுத்த மின் இணைப்பைப் பொருத்தவரை மின்மாற்றி நிறுவாமல் விரிவாக்கம் அல்லது மேம்பாடு செய்யவேண்டியது<br>(ii) தாழ் அழுத்த மின் இணைப்பைப் பொருத்தவரை, மின் மாற்றி நிறுவி விரிவாக்கம் அல்லது மேம்பாடு செய்யவேண்டியது<br>(iii) திறன் மின்மாற்றி மின் சக்தி அதிகப் படுத்துதல் / உயர் அழுத்த / அதிக உயர் அழுத்த மின் இணைப்பைப் பொருத்தவரை திறன் மின்மாற்றிக்கு கூடுதல் இணைப்பு தேவைப்படுதல்<br>(iv) உயர் அழுத்த / அதிக உயர் அழுத்த மின் இணைப்பைப் பொருத்தவரை, புதிய துணை மின் நிலையம் அமைக்கத் தேவைப்படுதல் | ஒருநாள் தாமதத்திற்கு ரூ.100/- வீதம் அதிகபட்சமாக ரூ.1000/- க்கு மிகாமல் |

மேலும் விவரங்களுக்கு, மின் நுகர்வோர்கள், ஆணைய இணையதளமான www.tnerc.gov.in ஐ பார்க்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஆ. பாரி .

செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்